# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/45 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/45 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிள்யு. 68 (70)/76.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

கொழும்பு,
1976, திசெம்பர் 17 ஆந் தேதி.

ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் அவசரகால (விலங்குகளைக் கொண்டு செல்வதிலான மட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ் ஒழுங்குவிதிகள் வலுவுள்ளனவாய் இருந்துவரும் காலத்தில், 1968 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம் அதன் கண்ணுள்ள 3அ என்னும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்பட்டிருந்தாற் போன்று பயனுடையதாதல் வேண்டும் :—

"வாகனங்களையும் விலங்குகளையும் பறிமுதல் செய்வதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

3அ. இப்பாகத்தின் கீழான அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழான தவறுக்கு எவரேனுமாள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள் அத்தவறுக்கென விதிக்கப்பட்ட வேறு ஏதேனும் தண்டனைக்கு ஆளாவதுடன், அத்தவறு புரிவதில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனமும் அத்தவறு எவ்விலங்கு தொடர்பில் புரியப்பட்டதோ அவ்விலங்கும், குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிவானால் பறிமுதல் செய்யப்படுவதற்கு உரியனவாதலும் வேண்டும். ".

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது